ஸ்ரீ ஹரி :

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 5 | செப்டம்பர் 1999 | கானம் : 2



Humble Pranams at the Lotus Feet of Sri Swamigal

ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி


(தெய்வீக மாதப் பத்திரிகை)


வேணு : 5 செப்டம்பர் 1999 கானம் : 2


## விஷய ஸூசிகை

பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 3 |
| 2. | மதுரமான மஹனீயர் - 46 | 4 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 5 |
| 4. | மார்கதர்ஶி மஹரிஷி - 1 | 9 |
| 5. | வேங்கடவன் பெற்ற வடு | 12 |
| 6. | வேத கதைகள் - 28 | 14 |
| 7. | எந்தரோ மஹானுபாவுலு -16 | 18 |
| 8. | ஸ்ரீ ஶங்கரநாராயணய்யர் | 24 |
| 9. | பாலகர்களுக்கு ஒரு கதை - 22 | 26 |
| 10. | நக்ஷத்ரங்களின் பெருமைகளும் விளக்கங்களும் - 25 | 27 |
| 11. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 49 | 29 |
| 12. | செய்திகள் | 31 |



திருகுறுங்குடி நம்பி

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம்

## கும்மிபாட்டு

ராகம் : ஆனந்தபைரவி தாளம் : ஜம்பை

*அந்தி நேரம் நதி தீரம் மதி நிறைந்திடும் வேளை*
*வீடு துறந்து தன்னை மறந்து வந்து நின்றனர் கோபியர்*
*மாடு மேய்க்கும் கண்ணனையே காட்டின் நடுவில் கண்டனர்*
*குழலூதி தன்னையழைத்த காரணத்தையே கேட்டனர்*

*யாரழைத்தது இங்கு உங்களை பாரில் உள்ளோர் நாளை பழிப்பர்*
*மர்மமாகவே தர்மம் சொல்லி வீடு திரும்பவே வேண்டினான்*
*ஒன்றுமறியா உத்தமிகளே கன்று மேய்த்திடும் சிறுவன் நான்*
*தொன்று தொட்டு வரும் தர்மத்தை மீறி நடப்பதும் அழகாமோ*

*வஞ்சனையாய் அழைத்தெங்களை நீதி போதனை செய்வதேன்*
*அஞ்சலி செய்து தொழுகின்றோம் போக்கிடுவாய் எங்கள் தாபத்தை*
*கொஞ்சி கொஞ்சி பேசிடும் நீ மாற்றி இன்று பேசுவதேன்*
*அஞ்சி அஞ்சி வந்து நின்றோம் ப்ராணத்யாகமும் பெரிதல்ல*

*சொந்தமும் பந்தமும் நீயே என்று சொல்லி கொடுத்ததும் நீதானே*
*மந்த மதியினர் என்று எண்ணியே ஏய்த்திட நீ எண்ணாதே*
*ஆதியும் அந்தமும் இல்லாத நீ சிந்தனைக்கெட்டாத சித்தனன்றோ*
*வந்து நின்றிடும் எங்களிடம் நீ சற்றே கருணை புரிந்திடுவாய்*

*எல்லாம் அறிந்தவன் ஆயினும் நீ ஒன்று மட்டும் அறியவில்லை*
*நம்பி வந்தோரை கைவிடுதல் பொல்லாத பாபம் என்று அறியாயோ*
*அல்லல் அடைந்திடும் எங்களை நீ ஆறத்தழுவி அணைத்திடுவாய்*
*சொல்லாமலே என்றும் உணர்ந்திடும் நீ சொல்லியும் வேடிக்கை பார்ப்பதேனோ*

*மும்மாயம் கடந்த முகுந்தனும் அங்கு ராஸ நடனமே ஆடினானே*
*முப்பத்துமூவரும் சூழ்ந்து நின்று தூமலர் தூவி மகிழ்ந்தனரே*
*முக்கண்ணனும் அங்கு வந்து ராஸ த்யானத்தில் ஆழ்ந்து விட்டார்*
*முரளீதரனின் மோஹன நடனத்தில் சொக்காதவரை கண்டால் சொல்லு*

## 46

எப்பொழுதெல்லாம் நம் ஸ்வாமிகள் சென்னை ப்ரேமிக பவனத்தில் உள்ளாரோ, அப்பொழுதெல்லாம் நம்முடைய ஸத்ஸங்கத்தின் அன்பர்களுடன் திவ்ய நாமஸங்கீர்த்தனம் செய்வார். சுமார் ஓரிரு மாதங்களுக்கு முன் ஒரு ஏகாதஸீ தினம். அன்று, காலையில் பெருமாளுக்கு திருமஞ்சனம் நடைபெற்றது. பிறகு நம் ஸ்வாமிகள் பல முறை ஸஹஸ்ரநாம அர்ச்சனை செய்தார். பிறகு நம் ஸத்ஸங்கத்தை சேர்ந்த மகளிர் மண்டலியினரால் திவ்யநாம ஸங்கீர்த்தனம் நடைபெற்றது. அன்று இரவு நம் ஸ்வாமிகள் திவ்யநாம ஸங்கீர்த்தனம் செய்தார். ஸங்கீர்த்தனம் ஆரம்பம் முதலே மிகவும் பாவமாக இருந்தது. அன்று ஸ்வாமிகள் பல திவ்யநாம கீர்த்தனங்களுக்கு அனுகரணம் செய்து ஆடியது மிகவும் அழகாக இருந்தது. அதிலும் காளிங்க நர்த்தனத்திற்கு அனுகரணம் செய்தது வார்த்தைகளால் எழுத முடியாது. அவ்வளவு அழகாக நர்த்தனம் செய்து கொண்டே மூர்ச்சையாகி விழுந்து விட்டார். நம்முடைய ஸங்கத்தில் எவ்வளவோ திவ்யநாம ஸங்கீர்த்தனங்கள் நடந்து வந்தாலும், அன்றைக்கு நடந்த திவ்ய நாம ஸங்கீர்த்தனம் வாழ்நாள் முழுவதும் மறக்கமுடியாத ஒன்று ஆகும்.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

---

*கலியுகத்தில் இறைவனுடைய ஸாந்நித்யம் ஒரு இடத்தில் ஏற்பட செய்வதற்கு ஹரி நாம ஸங்கீர்த்தனத்தைக் காட்டிலும் வேறு ஸுலபமான வழி கிடையாது.*

**- ஸ்ரீ ஸ்வாமிகள்**

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிகளின் பதில்கள்

*கேள்வி : துளஸி மணி மாலையை எப்பொழுதும் அணிந்து கொள்ளலாமா? அல்லது ஜபம் செய்யும் காலங்களில் மட்டும்தான் அணிந்து கொள்ள வேண்டுமா?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : ஒரு ஸ்த்ரீக்கு எப்படி தாலிக்கொடியோ, ஒரு புருஷனுக்கு எப்படி பூணூலோ அப்படித்தான் ஒரு வைஷ்ணவனுக்கு துளஸிமாலை என்பது. ஆகவே, எப்பொழுதும், என்ன காரியம் செய்து கொண்டிருந்த போதிலும் அதை அணிந்து கொள்ளலாம். அதில் தவறு இல்லை.

*கேள்வி : அந்திமகாலத்தில் நாராயணா என்று சொன்ன அஜாமிளனுக்கும் மோக்ஷம். எத்தனையோ சிரமங்களுக்கு நடுவே பக்தி செய்த ப்ரஹ்லாதனுக்கும் மோக்ஷம். இது எப்படி சரியாகும்?*

பதில் : ஒரு தந்தைக்கு பல குழந்தைகள். சில குழந்தைகள் தந்தை சொல்படி கேட்டு நடக்கின்றனர். சில குழந்தைகள் தந்தை சொல் கேட்பதில்லை. எல்லா குழந்தைகளுக்கும் வேண்டியவைகள் அனைத்தையும் தந்தையார் செய்து கொடுப்பார். குழந்தைகளை ரக்ஷிக்கின்ற விஷயத்தில் தந்தையாருக்கு பாரபக்ஷமில்லை. ஆனால், தான் சொல்படி கேட்டு நடக்கின்ற குழந்தைகளை மட்டும்தான் தந்தை கொஞ்சுவார். அதுபோல் ப்ரஹ்லாதனை மட்டும் பகவான் கொஞ்சுவார். அஜாமிளனை பகவான் கொஞ்ச மாட்டார். பகவான் கொஞ்சுவதில் அலாதி சுகம் உண்டு!

*கேள்வி : ராதாக்ருஷ்ண யுகளங்களை நான் பூஜித்து வருகின்றேன். ஏதாவது வழிமுறைகள் உண்டா?*

பதில் : வைதீக முறைப்படியோ, கீர்த்தன பத்ததிபடியோ பூஜை செய்யலாம். ராதாக்ருஷ்ண யுகள உபாஸனை மிகவும் ரஸரூபமானது. மிகவும் ரஹஸ்யமானதும் கூட. பல ஜன்மங்களின் புண்ய வசத்தினாலேயே இது தங்களுக்கு கிடைத்துள்ளது. மேலும், சிரத்தையுடன் பூஜை செய்து வர, பல ரஸரூபமான ரஹஸ்ய அனுபவங்கள் தங்களுக்கு ஏற்படும்.

*கேள்வி : பகவானை எவ்வளவு பூஜை செய்தும் எனக்கு மேலும் மேலும் சிரமங்கள் வருகின்றன. அப்படி இருக்க என்னால் எப்படி பகவானிடம் காதலுடன் பக்தி செய்ய முடியும்?*

பதில் : ஒரு மருத்துவர் நம்முடைய உடலை அறுத்தும், சுட்டும், பல கசப்பு மருந்துகளை கொடுத்து ஹிம்ஸை செய்தபோதிலும் நாம் அவரிடம் மாறாத அன்புடன் இல்லையா? காரணம் என்ன? அவைகள் நம்முடைய நன்மைக்குத்தான் என்று நாம் புரிந்து கொண்டதுதானே. அதுபோல் நமக்கு எவ்வளவு சிரமங்கள் வந்தாலும், நம்மை பக்குவப்படுத்துவதற்குத்தான் அல்லது ஏதோ ஒரு நன்மைக்குத்தான் அவைகளை அளிக்கின்றான் என்று புரிந்துகொண்டு இறைவனிடம் மாறாத காதல் கொள்ளவேண்டும்.

*கேள்வி : இறைவன் கஷ்டங்களையே தராமல் என்னை பக்குவப்படுத்தக் கூடாதா?*

பதில் : அது அவனுடைய வழி. நாம் அதில் கேள்வி கேட்க முடியாது.

*கேள்வி : இறைவனேதான் நமக்கு கஷ்டங்களை தருகின்றானா?*

பதில் : கஷ்டங்கள் நம்முடைய ப்ராரப்த வசத்தால்தான் வருகின்றன. நாம் கஷ்டங்களை எடுத்துக்கொள்ளும் விதம் இத்தகையதாகத்தான் இருக்கவேண்டும்.

*கேள்வி : இறைவனிடம் காம்யார்த்தமாக வேண்டுதல் பண்ணிக் கொள்ளக் கூடாதா?*

பதில் : நம்முடைய வேதமந்திரங்களே, "நான் உனக்கு இதை தருகின்றேன். எனக்கு இதைத் தா" என்றுதான் பலவாறாக ப்ரார்த்திக்கின்றன. இதில் தவறு ஒன்றும் இல்லை. ஆனால் நிஷ்காம்யமான பக்தி மிகவும் உயர்ந்தது.

*கேள்வி : என் குழந்தைகளை நான் எப்படி வளர்க்கவேண்டும்?*

பதில் : கோவில், ஸத்ஸங்கம், மஹான்களின் தரிசனம் போன்ற காரியங்களுக்கு செல்லும்பொழுதெல்லாம் குழந்தைகளையும் அழைத்துச் செல்லவேண்டும். நாம் பூஜை செய்யும்பொழுது பக்கத்தில் உட்கார வைத்துக் கொள்ளவேண்டும். நாம் ஏதாவது தானம் செய்தால், அவர்கள் கையால் கொடுத்து வழங்கவேண்டும். குழந்தைகளுக்கு நல்ல புத்தகங்களை வாங்கிப் படிக்கத் தரவேண்டும்.

*கேள்வி : என்னுடைய நண்பருடைய குழந்தை சிறு வயதில் மிகவும் பக்தி சிரத்தையுடன் இருந்தான். இப்பொழுது மிகவும் மாறி விட்டானே?*

பதில் : கவலை வேண்டாம். சிறு வயதில் அவன் உள்ளத்தில் விழுந்துள்ள ஆன்மீக விதை சரியான கால கட்டத்தில் மீண்டும் எழும். ஒருக்காலும் அவன் வீணாகமாட்டான். தகுந்த காலத்தில் மீண்டும் அவனுக்கு பக்தி, சிரத்தை தானாகவே விழித்து எழும்.

*கேள்வி : இறைவனுடைய நாமங்களை சொல்வதினால் புண்யம் வருகின்றதா? புண்யம் செய்ததனால் இறைவனுடைய நாமங்களை ஒருவன் சொல்கின்றானா?*

பதில் : பலகோடி ஜன்மத்தில் செய்துள்ள புண்யத்தின் பலனாகத்தான் ஒருவனுடைய நாவில் பகவானுடைய நாமங்கள் வருகின்றன. இறைவனுடைய நாமங்கள் எங்கு ஜபிக்கப்படுகின்றனவோ, அது அந்த சூழ்நிலையையே புனிதமாக்கி விடுகின்றது.

---

நாம் செய்யும் அனைத்து ஸத்காரியங்களும் ஸாத்வீக புத்தியுடன் செய்யாவிட்டால் அவைகள் ஸத்காரியங்களாகாது.

ராவணன், அக்னிஹோத்ரம், ஔபாஸனம், வேத அத்யயனம், ஸாமகானம், சிவபக்தி போன்றவற்றில் சிறந்தவனாக இருந்தாலும் அவைகள் ஸாத்வீகமாக செய்யப்படாததால் அவைகள் ஸித்த சுத்தியை தரவில்லை.

நாம் என்ன செய்கின்றோம் என்பது பெரிதல்ல. எப்படி செய்கின்றோம் என்பதுதான் முக்கியம்.

**- ஸ்ரீ ஸ்வாமிகள்**



# மார்க்கதர்ஶி மஹரிஷி - I

- ஸ்ரீ ஸ்வாமிகள்

நம்முடைய பாரதத்தாய், எண்ணற்ற மஹான்களையும், அவதார புருஷர்களையும், புண்ணிய நதிகளையும் ஈன்றெடுத்துள்ளாள். முப்பத்து முக்கோடி தேவர்களும் இந்த பாரத தேசத்தில் பிறப்பதற்கு ஆசைப்படுகிறார்கள் என்றால், இந்த பாரத தேசத்தின் பெருமையை எழுதவோ, சொல்லவோ முடியுமா? இந்த கலியுகமானது பாவிகளை படைக்கும் யுகம். இந்த கலியுகத்தில் நடக்கும், நடக்க இருக்கும் விபரீதங்களை புராணங்கள் ஓரளவு கோடிட்டு காண்பிக்கின்றன. இத்தகைய கலியுகத்திலும் *கலௌ, கலு பவிஷ்யந்தி நாராயண பாராயணா:* என்று அநேக ஹரிதாஸர்கள் அவதரிக்கப் போகின்றார்கள் என்று ஸ்ரீமத்பாகவதம் சூசகம் செய்கின்றது. இந்த கலியுகத்தில் ஸாதுக்களே கதி. அதாவது ஸத்ஸங்கமே புகலிடம். நம்முடைய ஸமீபகாலத்தில் வாழ்ந்த அத்தகைய ஜீவன் முக்தர் ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்.

வேதம், நூறு வருட ஆயுளை ப்ரார்த்திக்கின்றது. மஹாபெரியவாளும் நூறு வருடங்கள் வாழ்ந்தவர். நூறு வருடங்கள் உலகில் வாழ்வதுகூட பெரிதல்ல. எப்படி வாழ்ந்தார் என்பதுதான் கேள்வி? தன்னுடைய ஆயுள் முழுவதும் ஜபம், த்யானம், அனுஷ்டானம், உபவாஸம், பூஜை, மௌனம், வேதாந்த விசாரம், வ்ரதம் என்பது ஒரு புறமும், மற்றொரு புறம் தன்னைத் தேடி வரும் அத்தனை ஜனங்களுக்கும், அனுக்ரஹமும், மனசாந்தியும், ஓயாத தத்துவஞான, தர்ம உபதேசங்களும், மற்றொரு புறம் வேதரக்ஷணம், பாழடைந்த ஆலயங்கள் ஜீர்ணோத்தாரணம், மற்றும் பிடி அரிசி திட்டம், கோ ஸம்ரக்ஷணம், ஏழை பெண்கள் விவாகத்திற்கு உதவி, நோயுற்றவருக்கு ப்ரஸாதம் கொடுத்தல் போன்ற பல லோக உபகாரமான காரியங்கள். இப்படியாக வாழ்ந்த பெரியவர் அவர்.

பதிமூன்று வயதில் துறவு மேற்கொண்டது கூட பெரிய விஷயமில்லை. ஒரு பெரிய பீடத்தை நிர்வகிக்கவேண்டிய பொறுப்பும் அவரிடம் வந்து சேர்ந்தது. வழிகாட்டவோ, ஸந்தேகங்களை தீர்த்துக் கொள்ளவோ, குரு இல்லை. நாஸ்திகமும், ப்ராஹ்மண த்வேஷமும் தலை

விரித்தாடிய காலகட்டமது. ஒரு பீடத்திற்குரிய எந்த ஸௌகரியத்தையும் அவர் விரும்பி ஏற்றுக் கொள்ளவில்லை. அதே ஸமயத்தில், ஒரு பீடாதிபதிக்குரிய எந்த கடமையிலிருந்தும், அவர் விலகவில்லை.

ஆன்மீக தாபத்தினால் தூண்டப்பட்ட *பால்பிரண்டன்* என்ற வெளிநாட்டுக்காரர் அத்யாத்மீகம் தழைத்தோங்கும் பாரத தேசத்தை அடைந்து தனக்கு உயர்ந்த ஆன்மீக அனுபவத்தை அருளத்தக்க ஒரு குருவை தேடினார். இதுவரை வெளிநாட்டுக்காரருக்கு பேட்டி கொடுப்பதில்லை என்ற கட்டுப்பாட்டையும் மீறி, பரம கருணையினால், பால்பிரண்டனை, ஸ்ரீ ரமண மஹரிஷியிடம் செல்லும்படி அறிவுறுத்தினார். அவரும் ரமண மஹரிஷியை குருவாக ஏற்றுக் கொண்டு, ஆன்மீகத்தின் உன்னத நிலையை அடைந்தார்.

இன்று அபிநவ போதேந்த்ர ஸ்வாமிகளோ என்று எல்லோரும் வியக்கும்படி ஓயாமல் பாகவத ப்ரச்சாரமும், நாமகீர்த்தன ப்ரச்சாரமும் செய்துவரும் பரனூர் மஹாத்மா ஸ்ரீ க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகள் திருவிடைமருதூர் வேதபாடசாலையில் படித்துக் கொண்டிருந்தபோது, திருவிடைமருதூர் விஜயம் செய்த காஞ்சி ஆச்சார்ய மஹா ஸ்வாமிகளை தரிசனம் செய்து நமஸ்கரித்தார். அப்பொழுது காவிரிக்கரையில் வீற்றிருந்த ஆச்சார்ய மஹாஸ்வாமிகள் அங்கிருந்து தெரிந்த போதேந்த்ர ஸ்வாமிகளின் அதிஷ்டானத்தைக் காண்பித்து, குழந்தையாயிருந்த க்ருஷ்ணப்ரேமி ஸ்வாமிகளிடம், 'உனக்கு நான் குரு இல்லை, அதோ தெரிகிறதே போதேந்த்ர ஸ்வாமிகள் மடம், போதேந்த்ர ஸ்வாமிகள் தான் உனக்கு குரு' என்று காட்டியருளினார்.

இன்று வள்ளிமலை ஸ்வாமிகளை குருவாகக் கொண்டு, முருகன் மேல் அருளால் உந்தப்பட்டு பல பாடல்களைப் பாடிவரும் ஸாதுராம் ஸ்வாமிகளையும், ஸந்யாஸம் வாங்கிக்கொள்ளும்படி காஞ்சி மஹாபெரியவாள்தான் அனுக்ரஹித்தார். இன்று திருமலைவையாவூர் என்ற க்ஷேத்ரத்தில் ஸ்ரீனிவாஸப் பெருமாளுக்கு திருப்பணி செய்துவரும் ஸீதாராம் ஸ்வாமிகளையும், "ஜன்மாந்திரத்தில் நீ கோவிந்தனை உபாஸனை செய்தாய், இந்த ஜன்மத்திலும் கோவிந்தனை உபாஸனை செய்வாய் திருமலைவையாவூர் திருப்பணி செய்" என்று அனுக்ரஹித்தார்.

இன்று திருவண்ணாமலையில் ஜீவன் முக்தராக ப்ரகாஸித்து வரும் யோகிராம்சுரத்குமார் அவர்கள் ஸ்ரீமஹாபெரியவாளுடன் பல யாத்திரைகளில் உடன் தங்கி உள்ளார். காவ்யகண்ட கணபதி முனி என்ற யோகீஸ்வரர், தான் சொல்லும் சில விஷயங்கள், மஹா பெரியவாள் சொல்லும் சில விஷயங்களுக்கு மாறுபட்டு இருந்ததால், பெரியவாளை பலகாலம் தரிசனம் செய்யாமலேயே இருந்தார். அத்தகையவரையும் பெரியவாள் கூப்பிட்டனுப்பி அவருடன் ஸம்பாஷித்து, விலை உயர்ந்த ஸால்வை ஒன்றை போர்த்தி கௌரவித்தார்.

ஜானகி மாதா என்ற மாதுஸ்ரீ, ரமண மஹரிஷிகளிடம் அத்யந்த பக்தி உடையவர். யோக ஸாதனைகளில் பலவிதமான அற்புத அனுபவங்கள் இவருக்கு ஏற்பட்டன. அந்த அம்மையாரும் காக்கிநாடா, கும்பகோணம் போன்ற க்ஷேத்ரங்களில் ஸ்ரீமஹாபெரியவாளை தரிசனம் செய்து, அவருடைய அனுக்ரஹத்திற்கு பாத்திரமானார். கும்பகோணத்தில் அம்மாளு அம்மாள் என்று இப்பொழுது வாழ்ந்துகொண்டு இருக்கும் பாண்டுரங்க பக்தையை தானாகவே மஹாபெரியவாள் கூப்பிட்டு அனுப்பி அனுக்ரஹம் செய்தார்.

சென்னையில் வசித்துவந்த 'ஆண்டவன் பிச்சை' என்ற அம்மாளுக்கு, முருகன் ப்ரத்யக்ஷம். மரகதவல்லி என்ற இந்த அம்மாளுக்கு 'ஆண்டவன் பிச்சை' என்ற பெயர் சூட்டியதே பெரியவாள்தான். அந்த அம்மையாரின் வாழ்வில் ஏற்பட்ட பல ஸந்தேகங்களை போக்கி, ஸ்ரீ மஹாஸ்வாமிகள் அனுக்ரஹம் செய்தார்கள். கலியுகத்திலும் வாஜபாயமா, ஸோமயாகமா என்று ஆச்சரியப்படும்படி இன்று அனுஷ்டித்தும், பலரை அனுஷ்டிக்க வைத்தும் வரும் முசிறி அக்னிஹோத்ர அனந்தநாராயண வாஜபேயாயாஜி அவர்களை இந்த மார்க்கத்தில் ப்ரவேசிக்க வைத்த பெருமை ஸ்ரீ மஹாஸ்வாமிகளையே சாரும். இதுபோல் மற்றும் அநேக மஹாத்மாக்களும், ஸாதுக்களும் அவருடன் ஸம்பந்தப்பட்டிருக்கலாம்.

(தொடரும்)

---

(இந்த கட்டுரையின் வாயிலாக ஸ்ரீஸ்வாமிகளுடன் சேர்ந்து, அந்த புண்ணிய புருஷர்களை ஸ்மரிப்போமாக).

# வேங்கடவன் பெற்ற வடு

திருவேங்கடவனை அறியாத மக்களே இருக்க முடியாது. உலகில் உள்ள அனைத்து திருப்பதிகளிலே சிறந்தது திருவேங்கடமலையே ஆகும். தினமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் சென்று ஸேவிக்கும் ஒரு ஒப்பற்ற திருப்பதி திருவேங்கடமலையாகும். இத்திருப்பதிக் கோயிலைச் சுற்றி மிக அடர்ந்த காடுகள் சூழ்ந்து இருந்தன. மக்கள் நடமாட்டமோ மிகக் குறைவு. திருவேங்கடமலையில் மணம் மிக்க பல மலர்கள் பூத்துக் குலுங்கின. மலரைப் பறித்துச் சூட்டுவாரின்றி மலர்கள் தரையில் பாய்போல் விழுந்து கிடந்தன. இந்நிகழ்ச்சியை

*''சிந்து பூ மகிழும் திருவேங்கடம்''* என்கிறார் நம்மாழ்வார். மற்றும் திருவேங்கடவன் மலர்களைச் சூட பெரிதும் விரும்புவன். எனவே திருவேங்கடம் ''புஷ்ப மண்டபம்'' என வழங்கப்பட்டது. இக்காலத்தில் ஸ்ரீ பெரும்புதூரிலே பிறந்த இளையாழ்வார், திருமால் நெறிபரப்பி, திருவரங்கன் செல்வங்களைத் திருத்தி, திருவரங்கனுக்குத் தொண்டாற்றி வந்தார். ஒருநாள், திருமாலடியவர்கள் கூடியிருந்த அவையிலே

''ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி
வழுவிலா அடிமை செய்யவேண்டும் நாம்''-

என்ற பதிகத்தில் *''சிந்து பூ மகிழும் திருவேங்கடம்''* - என்ற தொடருக்குப் பொருள் கூறினார். அப்பொழுது அங்கிருந்த அடியவர்களை நோக்கி திருவேங்கடவனுக்கு பூந்தோட்டம் அமைத்து, தினமும் திருவேங்கடவனுக்கு மலர் கொடுக்கும் திருப்பணியை மேற்கொள்ள விருப்பமுள்ளவர் எவர் என்று வினவினார்.

அனந்தாழ்வார் என்பவர் எழுந்திருந்து, ''அப்பணியை ஏற்க, யான் திருவேங்கடம் செல்ல விரும்புகிறேன். எனக்கு அனுமதி தாருங்கள்'' என்றார். ராமானுஜரின் உத்தரவைப் பெற்று, அனந்தாழ்வார் திருவேங்கடம் சென்று, பூந்தோட்டம் அமைக்கும் பணியில் ஈடுபட்டார். அனந்தாழ்வாரும் கருவுற்றிருந்த அவரது மனைவியும் இப்பணியில் ஈடுபட்டனர். ஆழ்வார் மண்ணை வெட்டி, தன் மனைவியின் தலையில் சுமையை ஏற்றி கரையில் கொட்டும்படிச் செய்தார். கருவுற்றிருந்த அவர் மனைவி மண் சுமக்க

முடியாமல் மிகவும் வருந்தினாள். ஆனால் அனந்தாழ்வாரோ, இது இறைவன் திருப்பணி என்று கூறி அவளை விட்டபாடில்லை. இதைக் கண்ட திருவேங்கடவன் மனம் பொறுக்கமுடியாமல் ஒரு சிறுவனாக வந்து, அனந்தாழ்வாரிடம் அப்பணியில் பங்கு கொள்ள அனுமதி வேண்டினான்.

ஆனால் அனந்தாழ்வார் இதற்கு மறுத்துவிட்டார். பின்பு அச்சிறுவன் அந்த அம்மையாரிடம் சென்று அனுமதி கேட்க அம்மையாரும் தன் சிரமத்தினால் அனுமதி கொடுத்தாள். சிறுவன் மண் சுமந்து உதவி புரிந்தான். விரைந்து வந்து கூடையை திரும்பி தரும்படி அம்மையார் கேட்க சிறுவனும் அங்ஙனமே செய்தான். அனந்தாழ்வார், தன் மனைவி சீக்கிரம் திரும்பி வருவதைக் கண்டு அதன் காரணம் கேட்க, அம்மையாரும் நடந்ததைக் கூறினார். சிறுவனின் ஏமாற்று வேலையை அறிந்த ஆழ்வார் மிகவும் கோபம் கொண்டு, சிறுவனைத் துரத்திக் கொண்டு ஓடினார். சிறுவன் வேகமாகச் சென்று திருமலை கோவிலுக்குள் செல்ல ஆரம்பித்தான்.

ஆழ்வார் தன் கையிலிருந்த மண்வெட்டியால் சிறுவனைத் தாக்கினார். மண்வெட்டி சிறுவனின் முகவாய்க்கட்டையைத் தாக்க, ரத்தம் பீறிட்டு வந்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் சிறுவன் மறைந்துவிட்டான். அனந்தாழ்வார் கோவில் கருவரையில் சென்று தேடினார். அங்கும் சிறுவன் இல்லை. நிமிர்ந்து நோக்கினார். வேங்கடவன் அர்ச்சா மேனியின் முகவாய்க்கட்டையிலிருந்து ரத்தம் கொட்டுவதைக் கண்டார். இதைக் கண்டதும் அனந்தாழ்வார் பதறினார், திடுகிட்டார். உடனே ஓடிச் சென்று பச்சிலை மருந்து கொண்டுவந்து காயத்தில் சாற்றைப் பிழிந்து அந்த இலையை வைத்துக் கட்டினார். ரத்தம் நின்றது. சிறுவனாக வந்த வேங்கடவனே என்றுணர்ந்து நெஞ்சம் உருகினார். ஆனந்தக் கண்ணீர் விட்டார். அப்பொழுது ஏற்பட்ட வடுதான் இன்றும் திருவேங்கடவன் முகவாய்க் கட்டையில் வெண்மையாக காணப்படுகின்றது.

இதுவே,

''வேங்கடவன் பெற்ற வடு''வாகும்.

இன்றும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் திருமலையில் உள்ள திருவேங்கடவன் முகவாய்க் கட்டையின் வடுவிற்கு ''பச்சை கற்பூரம்'' மருந்தாக இடும் வழக்கம் நடந்து வருகின்றது. ■

# வேத கதைகள் - 28

- தர்மக்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

## பசுவின் பெருமை

முன்பு ஒரு ஸமயம், ஸோமன் (சந்திரன்) ஆயிரம் பசுக்களை அடைந்தான். அவனை பின்பற்றி இந்திரனும் அதே ஆயிரம் பசுக்களை அடைந்தான். அந்த ஸோமன், இந்திரன் இவர்களைக் குறித்து யமனும் தனக்கு பாகத்தை விரும்பியவனாக அவர்களைச் சென்றடைந்தான். வந்த அந்த பசுக்களில் எனக்கும் ஒரு பாகம் இருக்கட்டும் என்று வேண்டினான். அவர்களும் அப்படியே ஆகட்டும் என்று அங்கீகரித்தனர்.

பிறகு யமன், ஆயிரம் பசுக்களை நன்கு பரீக்ஷை செய்து, ஒரு பசுவில் உயர்ந்த பசுவின் திறமை இருப்பதை கண்டுபிடித்தான். பிறகு, இந்த ஒரு பசுதான் ஆயிரம் பசுக்களின் ஸாமர்த்தியத்தை தாங்குகிறது என்று மனதில் தீர்மானித்து இந்த பசுதான் எனக்குத் தேவை. மீதி பசுக்கள் உங்கள் இருவருக்கும் இருக்கட்டும் என்று கூறினான். பிறகு ஸோமன், இந்திரன் இருவர்களும் பின்வருமாறு யமனிடம் கூறினர். நாம் எல்லோரும் ஒன்று கூடி இந்த உயர்ந்த பசுவினிடத்தில் சக்தியை பரிக்ஷை செய்து ஒவ்வொரு அம்சத்தை ஒவ்வொருவராக ஏற்றுக்கொள்வோம் என்று ஆராய்ந்து அவ்விதமே செய்தனர்.

பிறகு அம்மூவரும் ஒன்று கூடி அந்த உயர்ந்த பசுவை ஸோமனுக்காக எழுவாயாக என்று கூறி அந்த பசுவை ஜலத்தில் இறங்கச் செய்தனர். ஸோமனுக்கு எந்த உருவம் உண்டோ அதற்கு தகுந்ததாக உருவத்தை எடுத்து ஜலத்திலிருந்து எழும்புவாயாக என்பது இதன் கருத்து. பிறகு அந்த பசுவானது ஜலத்தில் அமிழ்ந்து ஜலத்திலிருந்து எழும்பும் போது ஸோமன் விரும்பிய உருவத்தை எடுத்துக்கொண்டு வெளியில் வந்தது.

சிவப்பு நிறம், மஞ்சள் கண், ஒரு வயது, இவ்விதமான அழகான உருவத்தை எடுத்து 333 பசுக்களுடன் ஜலத்திலிருந்து எழும்பியது. எந்த காரணத்தால் ஸோமனுக்காக இவ்விதமான உருவத்தை எடுத்ததோ,

அதனால் யாகத்தில் ஸோமலதை என்ற கொடியை, பசுவை விலையாகக் கொடுத்து வாங்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அந்த பசுவும் இவ்வித உருவமுள்ளதாக இருக்கவேண்டும். இவ்விதம் செய்தால் 333 பசுக்களுக்கு மேல்பட்டு அதிக விலை கொடுத்து ஸோமலதை வாங்கின பெருமை கிடைக்கும்.

பிறகு இந்திரனுக்காக தேவையான உருவமெடுத்து ஜலத்திலிருந்து எழும்பச் செய்தனர். இந்த பசுவும் நல்ல கொம்பு, வால் முதலிய அழகான லக்ஷணங்கள் அமைந்தவைகளாகவும் நான்கு வயது உள்ளதாகவும் பார்த்தவுடன் மனதில் உள்ள துன்பத்தை போக்குவதாகவும் உருவமெடுத்து வெளியே வந்தது. இந்த உருவம் இந்திரனுக்கு ப்ரியமானதால் இப்படிப்பட்ட பசுக்களையே யாகத்தில் தக்ஷிணையாக அளிக்கவேண்டும்.

பிறகு யமனுக்காக வெளிவந்தபோது கிழப்பருவமுள்ளதாகவும் மூர்க்கத்தனம் நிரம்பியவைகளாகவும் மிகவும் விகாரமுள்ளதாகவும் வெளிவந்தது. யாகம் செய்தவர் இறந்தால் அவருக்காக ஒரு பசுவை வதம் செய்து அவன் அங்கங்களில் பசுவின் அவயங்களை வைத்து எரிக்க வேண்டும். இவ்விதம் இறந்தவனுக்காக வதம் செய்யப்படும், பசுவிற்கு அனுஸ்தரணி என்று பெயர். இவ்வித பயங்கர உருவமானது யமனுக்கு தகுந்ததாக இருப்பதால் அனுஸ்தரணி என்ற பசுவானது இவ்வித உருவமுள்ளதாக இருக்கவேண்டும். அனுஸ்தரணி இவ்விதம் அமைந்ததால் இறந்தவனுக்கு பரலோகத்தில் 333 பசுக்கள் கிடைக்கும்.

எந்த பசுவானது ஸோமன் முதலானவர்களுக்காக மூன்று வித உருவம் எடுத்து ஜலத்திலிருந்து எழும்பியதோ அது வாக்தேவதையாக கருதப்படுகிறது. அதற்கு ஸஹஸ்ரதமீ என்ற பெயர். ஆதலால் ஆயிரம் பசுக்களை தக்ஷிணையாக அளிக்கவேண்டிய யாகத்தில் உயர்ந்த பசுவையே தக்ஷிணையாக அளிக்கவேண்டும். அப்படி உயர்ந்த பசுவை அளித்தால் ஆயிரம் பசுக்களையும் வாக்தேவதையையும் தக்ஷிணையாக அளித்த பலன் கிடைக்கும்.

இந்த கதையிலிருந்து தானம் கொடுக்க வேண்டிய பசுவானது மிகவும் உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்று நன்கு அறியப்படுகிறது.

## பசுக்கள் செய்த யாகம்

ஒரு ஸமயம் பசுக்கள் ஸத்ரம் என்ற யாகத்தை செய்தன. கால் நடைகளுக்கு யாகம் செய்ய தகுதி இல்லை. ஆனாலும் எந்த பொருளிற்கும் ஒரு தேவதை உண்டு. இவ்விதம் கால்நடைகளுக்கு யாகம் செய்ய தகுதி இல்லாமல் இருந்தாலும் பசுக்களின் தேவதைகள் யாகம் செய்யலாம். ஒரு ஸமயம் பசுக்களுக்கு கொம்பு கிடையாது. கொம்பற்ற பசுக்கள் தங்களுக்கு கொம்பு முளைக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் ஸத்ரயாகம் செய்தன.

யாகம் ஆரம்பித்து பத்து மாதங்கள் சென்றன. பத்து மாதங்களுக்குப் பிறகு சில பசுக்களுக்கு கொம்பு முளைத்தன. கொம்பு முளைத்த பசுக்கள் தாங்கள் விரும்பிய பயன் கிட்டியது என்ற எண்ணத்துடன் யாகத்தை முடித்துக் கொண்டன. பத்து மாதம் யாகம் செய்தும் கொம்பு முளைக்காத பசுக்கள் இரண்டு மாதம் அதிகமாக (ஒரு வருஷம்) யாகம் செய்தன. ஒரு வருஷம் யாகம் செய்தும் கொம்பு முளைக்கவில்லை. கொம்பு முளைக்காத போதிலும் நிறைவு பெற்றோம் என்ற மகிழ்ச்சியுடன் யாகத்தை முடித்துக் கொண்டன.

இவ்விதம் பத்து மாதம் யாகம் செய்து பயனடைந்த பசுக்களுக்கும் நிறைவு கிடைத்தது. ஒரு வருஷம் யாகம் செய்தும் கொம்பு முளைக்காத பசுக்களுக்கும் நிறைவு கிடைத்தது. இவ்வாறு எவ்விதம் ஏற்படலாம் என்று சந்தேகம் ஏற்படலாம். கொம்பு இல்லாத பசுக்களுக்கு தூபரம் என்று பெயர். கொம்பு முளைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் யாகம் செய்து கொம்பு முளைத்த பசுக்கள் அழகாக இருந்தாலும் மழைக் காலங்களில், காடுகளில் அவற்றுக்கு அதிகமான துன்பம் ஏற்படுகிறது. புயல் காற்று அடிக்கும் பொழுது கடுமையான காற்றாலும், கடுமையான மழையாலும் முகத்தில் தாக்கப்பட்ட பசுக்கள் தலையை தொங்கவிட்டு கொம்புகளின் கனத்தால் தலையை உயர்த்த முடியாமல் துன்பப்படுகின்றன. கொம்பற்ற பசுக்களுக்கு இந்த துன்பம் இல்லை.

எங்ஙனம் கேசம், மீசை, தாடியுள்ள புருஷர்களுக்கு முகம் அழகாக இருந்தும் நதியில் ஸ்நானம், கஞ்சி குடிப்பது போன்றவைகளில் அதிகத் துன்பம் ஏற்படுவது போல் கொம்புள்ள பசுக்களுக்கு துன்பம் ஏற்படுகிறது. கொம்பற்ற பசுக்களுக்கு மழை காலங்களில் துன்பம் இல்லாமையே பெரிய நிறைவு ஆகும். இந்த காரணத்தால் தான் கொம்பு முளைத்த பசுக்களுக்கும் முளைக்காதவைகளுக்கும் நிறைவு பயன் ஒன்றாகவே ஆகும்.

கொம்பு முளைக்கவேண்டும் என்ற ஆசையுள்ள பசுக்கள் யாகம் செய்து கொம்பை அடைந்தன. மற்ற பசுக்கள் இந்த கொம்புகளால் என்ன பயன்? வயிற்றுக்கு தேவையான பொருள்களையே சேகரிப்போம் என்று கொம்புகளின் ஆசை அற்றதாக ஆகின. கொம்பில் ஆசையற்று ஒரு வருஷம் யாகம் செய்த பசுக்களுக்கு வயிற்றிற்கு தேவையான உணவு, மேலும் கொம்பு இல்லாததால் மழை காலத்தில் துன்பம் இல்லாமை என்ற நிறைவும் கிடைத்தது.

இந்த கதையால் பயனை விரும்பியோ, விரும்பாமலோ யாகம் செய்தவர்களுக்கு மனதில் நிறைவு ஏற்படும், என்ற உண்மை நமக்கு நன்கு புலனாகின்றது.


श्री हरि:

**குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்**

சென்னை - 600 083.

**மதுரமுரளி வருடசந்தா - Reminder - II**

வருட சந்தா - உள்நாடு **Rs.** 60/- வெளிநாடு **Rs.** 300/-

***"குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்"*** என்னும் பெயரில் மட்டுமே ரொக்கம் / M.O. / காசோலை / DDஆக தங்கள் பெயர், முகவரி, சந்தா எண், தொலைபேசி எண் உள்ளிட்ட விவரங்களுடன் **உடனே** அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

அனுப்ப வேண்டிய முகவரி:
திரு. V. சங்கரன், மதுரமுரளி,
5/3, MIG Flats, பி.டி. ராஜன் சாலை,
கே.கே.நகர், சென்னை - 600 078.
Phone : 4714327

# எந்தரோ மஹானுபாவுலு- 16

ஸ்ரீராமானுஜர், ஸ்ரீரங்கத்தை அடைந்து அரங்கனின் அனுக்ரஹத்தால் உபய விபூதிகளையும் பெற்றபின்னர் பெருமாள் நியமனப்படி கார்யத்தில் ப்ரவேஸிக்கத் துவங்கினார். முதன் முதலில் கோவில் நிர்வாகப்பணியிலும் சீர்திருத்தப் பணியிலும்தான் இறங்கினார். நிர்வாகத்தில் இறங்குமுன் முதலில் யார் யார் என்ன கைங்கர்யம் செய்கின்றார்களென்று விசாரித்து அவர்கள் பணியினைப் பற்றி கேட்டறிந்து அந்த பணியாட்களை நேரில் பார்வையிட்டார். பிறகு கோயில் சிப்பந்திகளையும் பணிகளையும் நிர்ணயித்து எங்கெங்கு எத்தனை பணியாட்கள் தேவை என தீர்மானித்து அதன்படி புதிய அமைப்பை ஏற்படுத்தினார்.

அமுதுபடி, சாத்துப்படி, திருமாலை, திருவிளக்குகள் இவற்றையெல்லாம் கணக்கெடுத்து ஆராய்ந்து அவை குறைவற நடக்க ஏற்பாடுகள் செய்தார். திருவாராதனத்திற்கு வேண்டிய அனைத்தையும் ஆராய்ந்து அவை நன்கு நடக்குமாறு வேண்டிய ஏற்பாடுகள் செய்தார். இப்படி கோவிலில் ஒவ்வொரு இடத்தையும் சீர்திருத்தி குறைவில்லாத நிர்வாகத்தை ஏற்படுத்தி, நித்யோத்ஸவம், பக்ஷத்து உத்ஸவம், மாத உத்ஸவம், வருஷோத்ஸவம் ஆகியவைகள் காலம் தவறாமல் முறையாக நடக்க வழிமுறைகள் செய்தார்.


ஸ்ரீராமானுஜருக்கு முன் தோன்றிய மகான்கள் எந்த ஸமயத்தவராயிருந்தாலும் சரி, ஏதாவது ஒரு பாதையில் சிறந்தவர்களாக இருந்தார்கள். ஆனால் ஸ்ரீ ராமானுஜரை போல் எல்லா பாதையிலும் சிறந்து, முன்னால் சென்றோர்க்கு பின்னால் வந்த பெருவிளக்காகவும், பின்னால் தோன்றியவர்களுக்கு ஒரு கலங்கரை விளக்கமாகவும் இருந்தவர் யாருமில்லை என்றே சொல்லலாம். ஒப்பற்ற ஸன்யாஸியாகவும் மாபெரும் நிர்வாகியாகவும் திகழ்ந்த அவர், ஸமுதாயத்தில் கீழ்த்தளத்தில் இருந்தவர்களையும் திருத்தி மேலே அழைத்து பரமன் ஸேவையில் அவர்களுக்கும் இடமுண்டு என்று வழிவகுத்தார். வலுக்கட்டாயமாக யாரையும் இழுக்காமல் தனது தெய்வீகத் தன்மையாலும், அபார கருணையாலும் அனைவரது மனத்தையும் மாற்றி அவர்களாகவே ஸ்ரீவைஷ்ணவத்துக்கு திரும்புமாறு செய்தார்.

கூரத்தாழ்வானை தமக்குத் துணையாக கார்யங்களை நிர்வகிக்க நியமித்துக் கொண்டு, முதலியாண்டவனை கோவில் உள்துறை நிர்வாகியாக நியமித்தார். வைகானஸ முறைப்படி இருந்த கோவிலை பாஞ்சராத்ர முறைக்கு மாற்றினார். மேலும் உடையவர், தமது தமிழ்ப்பற்றையும் காட்டினார். நிர்வாகத்திலிருந்தவர்களுக்கு *பாகவதநம்பிமான், கோவில்கணக்கன், சடகோபதாசன்* என தமிழ்ப் பெயர்கள் சூட்டினார். மேலும் மற்ற இடங்களில் பணி செய்தவர்களை திருப்பணி செய்வார், உள்ளூரார், விண்ணப்பம் செய்வார், திருக்கரகக்கையார் என்று சிறப்பு தமிழ் பெயர்களை கொடுத்தார்.

இதற்கிடையில் திருக்கோட்டியூர் நம்பி, ஸ்ரீராமானுஜருக்கு தாம் சொல்லி வைத்தது மட்டும் போதாதென்று அவருக்கு திருவாய்மொழி சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்தார். இதற்காக அவரே திருமலை ஆண்டவனிடம் சென்று, உடையவருக்கு தேவரீர் திருவாய் மொழி அர்த்தத்தை உபதேசிக்கவேண்டும் என விண்ணப்பம் செய்துகொண்டார். திருமலையாண்டானும் மகிழ்ந்து செய்வதாக வாக்களிக்க ஸ்ரீராமானுஜர் அவரிடம் பாடம் கேட்கத் துவங்கினார்.

ஸ்ரீஆளவந்தாரிடம் மானஸிகமான குருபக்தியை ஏற்படுத்திக் கொண்டதாலே, உடனிருந்து வாசித்த சீடர்களைவிட ஸ்ரீராமானுஜர் பரம உத்தம சீடராய் விளங்கியதையும், தாம் கேட்காத திருவாய்மொழிப் பொருளெல்லாம், உடையவர் மானஸீகபக்தி மூலம் உணர்ந்து கொண்டதையும் கண்ட திருமலையாண்டான், ஒரு மகாபுருஷனுக்கு கேவலம் வ்யாஜமாக தான் ஆசிரியனானதை எண்ணி பெருமை அடைந்தார். பாடம் முடிந்ததும் தனது புத்திரனான சுந்தரபாகுவை உடையவரிடம் சீடராக அமர்த்தினார். இதை அறிந்த உடையவரின் ப்ரதம ஆசாரியரான பெரியநம்பி மிகவும் ஸந்தோஷமடைந்து, உடையவரை மேலும் சில ரஹஸ்யார்த்தங்களை அறிந்து கொள்வதற்கு திருவரங்கம் பெருமாளரையரிடம் அனுப்பினார்.

அன்றுமுதல் ஸ்ரீராமானுஜர் திருவரங்கம் பெருமாளரையருக்குப் பணிவிடை புரிந்து வரலானார். அரையர், பெருமாள் முன் ஆடிப்பாடி களைத்து வந்ததும், உடையவர் அவர் வரண்ட தொண்டைக்கு இதமாக பக்குவமாக காய்ச்சிய பசும்பாலில் குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், சர்க்கரை சேர்த்து இரவில் கொடுக்கலானார். களைத்த உடலுக்கு நீராட்ட ப்ரதிதினம்



சுகஸாமக்ரியைகள் சேர்த்து மஞ்சள் காப்பு அறைத்து உடலில் பூசி பக்குவமாக நீராட்டினார்.

ஒரு ஸமயம் மஞ்சட்காப்பு சரியில்லாமல் சிறிது பூசியதும் அரையர் லேசாக முகம் சுளிக்க, அதைக் கண்ட ஸ்ரீராமானுஜர் உடனே அதை ஒதுக்கி வேறு காப்பு அரைத்து பூசி அரையரை நீராட்டினார். இவ்வண்ணம் தமது திருமேனியை பாங்காக கவனித்த உடையவரை, அரையர் மனமுவந்து அழைத்து, "பிள்ளாய் ராமானுஜா! என் உள்ளத்தை உன் சேவையால் அடியோடு கொள்ளைகொண்டு விட்டாய். இதற்கு நான் கைமாறு செய்ய முடியாது என்றாலும், நான் கற்ற தத்துவங்களை உமக்கு கற்பிக்கிறேன்" என்று உயர்ந்த ரஹஸ்யார்த்தங்களை மனம் திறந்து அவருக்கு உபதேசித்தார்.

மேலும் ஸ்ரீ ஆளவந்தாரின் ஸ்தோத்திரரத்னம், ஸதச்லோகி ஆகிய க்ரந்தங்களையும் உபதேசித்தார். உடையவரும் தமக்கு ஸகல புருஷார்த்த தத்துவங்களும் கிடைத்தது போல பேருவகை எய்தினார். பின்பு அரையர், தமக்கு மகப்பேறு இல்லாததால் தமது தம்பி சொட்டை நம்பியை உடையவருக்கு சீடனாகத் தந்தார். இவ்விதமாக ஸ்ரீ ஆளவந்தாரின் சீடர்களிடம் பாடம் கற்றதன்றி ஒவ்வொரு சீடனையும் அடைந்த எம்பெருமானாரின் புகழ் ஓங்கி வளரலாயிற்று.

ஸ்ரீராமானுஜர் முன்னே சென்ற ஆசார்யர்களுக்கும், பின்னால் வந்த சீடர்களுக்கும் இடையே ஸ்ரீவைஷ்ணவ ஸமயமாகிற முத்துமாலையின் இடையே பதித்த மாணிக்கமாக சுடர் வீசி ஒளிர்ந்தார். அவரது கீர்த்தியினால் பலர் மகிழ்ந்தனர். சிலர் பொறாமையும் கொண்டனர். மகான்களின் அப்பழுக்கற்ற ஞானமும், மேதாவிலாசமும் புகழைத் தந்தாலும், சில அறிவற்ற மனிதர்கள் அதைக் கண்டு தங்கள் மனதில் பொறாமையை வளர்த்து விரோதத்தை உண்டு பண்ணுகின்றனர். அப்படித்தான் ஸ்ரீராமானுஜருக்கும், ஸ்ரீரங்கம் கோவில் ஸ்தானத்தார்களுக்கும் இடையே விரோதம் ஏற்பட்டது.

உடையவர் கோவில் நிர்வாக முறைகளை உறுதிப்படுத்தி, அவரது திட்டங்களை நடத்தி வைப்பதில் கண்டிப்பைக் கடைப்பிடித்தார். கட்டுப்பாடின்றி கோவில் சொத்தை சுரண்டுவதும், இஷ்டப்படி சுகமாக கோவில் காரியங்களை காலம் பாராமல் நடத்துவது கோயில் அதிகாரிகளுக்கு இயலாமல் போய்விட்டது. ராமானுஜர் இருக்கும் வரை

இனி தங்களிஷ்டப்படி நடக்க முடியாதென புரிந்துகொண்டு அவரை தீர்த்துக்கட்ட முடிவு செய்தனர்.

ஸ்ரீராமானுஜர் துறவறம் ஏற்றபின்பு ப்ரதிதினம் பிக்ஷை எடுத்து அதில் கிடைத்த உணவை மட்டுமே உண்டு வந்தார். ஏழு வீடுகளுக்கு மேல் பிக்ஷை எடுக்கப் போகவும்மாட்டார். அப்படி அவருக்கு அளிக்கும் பிக்ஷையில் விஷம் கலந்து அளிக்க ஒரு க்ருஹஸ்தரை ஏற்பாடு செய்தனர். அவரது மனைவி இந்தச் செயலுக்கு ஸம்மதிக்கவில்லை. எனினும் அவளது கணவனின் நிர்பந்தத்தின் பேரில் வேறுவழியின்றி ஒப்புக்கொண்டு, அந்தப் பாதகச் செயலை செய்துமுடித்தாள்.

அப்படியும் உடையவரை தப்புவிக்க ஒரு தந்திரத்தைச் செய்தாள். பிக்ஷை இட்டுவிட்டு கண்ணீருடன் அவருக்கு தெண்டனிட்டு வேகமாக உள்ளே சென்றாள். அவளது சோகத்தையும், வேகத்தையும் கண்டு உடையவர் தீவிரமாக சிந்தித்து தனது ஞானதிருஷ்டியால் உண்மையை அறிந்து காவிரிக்குச் சென்று ஆற்றில் உணவைக் கரைத்துவிட்டு உண்ணாமலே மடத்துக்குச் சென்றார். யாரிடமும் விரோதம் கொள்ளவில்லை. அவர்களை திருத்த உபவாசமிருப்பதே மேல் என நினைத்து அன்று முதல் பிக்ஷைக்கு செல்லாமலே இருந்து உண்ணாவிரதம் மூலம் விரோதிகளைத் திருத்த முடியும் என நினைத்தார்.

உடையவரின் உண்ணாவிரதம் ஸ்ரீரங்கத்தையே உலுக்கிவிட்டது. கோயில் அதிகாரிகளையும் தகிக்கத் தொடங்கியது. திருக்கோட்டியூர் நம்பியும் விவரமறிந்து, தமது சிஷ்யர்களுடன் உடனே ஸ்ரீரங்கத்துக்கு கிளம்பி வந்தார். நம்பி வரும் சேதியறிந்து ராமானுஜரும் தமது உடல் பலவீனத்தையும் அசட்டை செய்து தமது சிஷ்யர்களுடன் குருவை எதிர்கொள்ள விரைந்தார். நல்ல பட்டப் பகலில் கொளுத்தும் மணலில் நடந்து வந்து கொண்டிருந்தபோது நட்ட நடு காவிரிக்கரையிலே அவரை ஸந்தித்து ராமானுஜர் நெடுஞ்சாண்கிடையாக வீழ்ந்து குருவுக்கு தெண்டன் ஸமர்ப்பித்தார்.

கடும் வெயில் அவர் உடலை தகித்தாலும் லக்ஷியம் செய்யவில்லை. படுத்தபடியே கிடந்தார். நம்பியும் அவரை எழுந்திருக்க நியமிக்காமல் அவர் மணலில் கிடந்ததைப் பார்த்துக்கொண்டிருந்தார். ஆனால் ராமானுஜரது சீடரான கிடாம்பியாச்சான் இதை ஸகிக்கவில்லை. மிகுந்த சினத்துடன் திருக்கோட்டியூர்நம்பியை உஷ்ணமான கண்களால் பார்த்து,

"இதென்ன குரு சிஷ்ய பாவம்? நறுமணமுள்ள மலர் மாலையை நெருப்பில் போட்டுக் கொளுத்துவது உலகில் உண்டா?" என்று சீறினார்.

பிறகு நம்பியின் கோபத்தையோ, ராமானுஜரது தாபத்தையோ சிறிதும் யோசிக்காமல் உடையவருடைய திருமேனியை அன்புடன் இருகைகளால் தூக்கி நிறுத்தினார். இதைக் கண்டு இருதரப்பு சீடர்களும் திகைத்து நின்றனர். என்ன நடக்குமோ என்று அஞ்சினர். ஆனால் நம்பியின் முகத்தில் ஆனந்தம் பொங்கி புன்முறுவல் விரிந்தது. கிடாம்பியாச்சானை நோக்கி, "உம்மைத்தான் தேடுகிறோம். இவரது திருமேனியை பாதுக்காக்கக் கூடியவர் நீர்தாம். அவர் திருமேனியில் உமக்கு உள்ள பரிவைக் கண்டு மகிழ்ந்தோம். இனி ஸ்ரீராமானுஜர் பிக்ஷை எடுக்கவேண்டாம். இன்று முதல் நீரே அவருக்கு தளிகை பண்ணி பிக்ஷையாக ப்ரதிதினம் ஸமர்ப்பித்து வாரும்" என்று நியமித்தார். அன்று முதல் அந்தப் பணியை சிரமேற்கொண்ட கிடாம்பியாச்சான் மடத்தில் எழுந்தருளியிருந்தார்.

ராமானுஜருக்கு விஷமளித்த கோவில் அர்ச்சகரும், ராமானுஜர் மரணம் அற்றவர் என அறிந்து மனம் திருந்தி, அவரை அடைந்து திருவடிகளில் வீழ்ந்து புலம்பிய வண்ணம் தமது பிழை பொறுத்தருள வேண்டினார். உடையவரும் அவரை மன்னித்து அன்புடன் ஏற்றுக் கொண்டார்.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

---

அறிவிப்பு :

1. இதுவரை மதுரமுரளியில் வெளிவந்த ஸ்ரீ ஸ்வாமிகளின் கேள்வி பதில்கள், "ஸ்ரீ ஸ்வாமிகளின் அருளுரைகள்" என்ற தனி புத்தகமாக வெளி வந்துள்ளது.

   விலை ரூ. 20/-. சென்னை 'ப்ரேமிகபவன'த்தில் கிடைக்கும்.

2. மதுரமுரளி நான்காண்டு இதழ்கள் தனிபாகங்களாக வெளிவந்துள்ளன.

   ii) July '95 - Aug '96 ii) Sept '96 - July '97

   iii) Aug '97 - July '98 iv) Aug '98 - July '99

   இவை சென்னை ப்ரேமிகபவனத்தில் கிடைக்கும்.

# ஸ்ரீ ஶங்கரநாராயணய்யர்

ஸ்ரீமத் பாகவதத்தை ஸ்மரிக்கும்பொழுதெல்லாம் கூடக்கூடவே நினைவுக்கு வரும் ஒரு மஹான் ஸ்ரீ பி.என். ஶங்கரநாராணய்யர் என்பவர். ஸம்ஸ்க்ருதம், பெங்கால், ஆங்கிலம், ஹிந்தி முதலிய பாஷைகளில் பாண்டித்யம் கொண்டவர். B.A.B.L. படித்து, வக்கீலாக வாழ்க்கைத்துறையில் இறங்கிய இவருக்கு, பாகவத ஜீவனம் நடத்தும்படியாக ஸ்வப்னத்தில் தெய்வ ப்ரேரணை ஏற்பட்டது.

ஆசையுடன் ஸ்ரீமத் பாகவதத்தை கேட்பவர்களுக்கு ஜாதிபேதம், கால தேச நியமங்கள் இவைகள் ஏதுமில்லாமல், அறிவு ஹீனர்களாக இருந்தாலும் அவர்கள் உள்ளமும், தெளிவுறும்படி ஸரளமாக சொல்வதே அவருடைய வாழ்க்கையாக அமைந்தது. சிறுவர்களுக்கும், குழந்தைகளுக்கும் பாகவத கதைகளைச் சொல்வதில் அளவு கடந்த உற்சாகம் கொண்டிருந்தார். முக்கியமாக சேரிகளில் சென்று அங்கு ஹரிஜனங்களுக்கும் க்ருஷ்ண கதைகள் சொல்லி, நாம பஜனையில் உற்சாகம் ஊட்டி அவர்களையும் நல்ல ஶீலமுள்ளவர்களாக செய்தார்.

'பாகவதம் சொல்' என்று கேட்ட க்ஷணமே, ஶங்கரநாராயணய்யர் தம் ஸௌகர்யம் ஏதும் பாராது, உடனே சொல்லவேண்டும், அதற்கு ப்ரதிக்ஷணமும் தாம் தயாராக இருக்கவேண்டும் என்னும் நோக்கத்தால், எப்பொழுதும், எங்கு சென்றாலும் கையில் பாகவத புத்தகத்தை எடுத்தே செல்வார். இதனால் இவருக்கு ''பாகவத ஸ்வாமிகள்'' என்னும் பெயர் ப்ரஸித்தமாயிற்று. இவர் அரணாவின் பிரியப்பட்ட அன்பர்களில் ஒருவர்.

ஒரு ஸமயம், இவர் கல்கத்தாவில் தன் ஸம்பந்தி க்ருஹத்தில் தங்கியிருக்கும்பொழுது, அருகில் உள்ள குழந்தைகளுக்கு அவ்வப்பொழுது க்ருஷ்ணகதை சொல்லி வந்திருந்தார். ஒரு நாள் இவர் பகலில் சாப்பிட்டுவிட்டு சிறிது நித்திரையுற்றார். அப்பொழுது கூட்டமாக சில குழந்தைகள் வந்து, ''தாத்தா எங்கே? நாங்கள் க்ருஷ்ண கதை கேட்க வந்திருக்கோம்'' என்று உத்ஸாகமாக இரைந்து கேட்டார்கள். வீட்டிலிருந்த ஸம்பந்தியம்மா, ''உள்ளே கூச்சல் போடாதீர்கள், அவர் இப்பொழுதுதான் தூங்கப் போயிருக்கிறார். எல்லோரும் போய்விட்டு சாயந்திரம் வாருங்கள்'' என்றாள். குழந்தைகளும் திரும்பிச் சென்றனர். அரைத் தூக்கத்திலிருந்த பாகவத ஸ்வாமிகள் செவியில் இவ்வளவு ஸம்பாஷணைகளும் விழுந்தன.

'குழந்தைகள் எங்கே? என்று கேட்டுக்கொண்டே விரைவில் எழுந்து வந்தார். அவர்கள் சென்றுவிட்டார்கள் என்பதை அறிந்த பாகவத ஸ்வாமிகள் கண்களில், கண்ணீர் தாரை தாரையாக பெருகியது. தேம்பித் தேம்பி அழுதார். "யாருக்காவது எப்பொழுதாவது க்ருஷ்ணகதை கேட்க ஆசை வந்தால், அந்த ஸந்தர்ப்பத்தை நழுவ விடாமல், உடனே கதை சொல்லி க்ருஷ்ண ரதியை வளர்க்கணும் என்பதை விரதமாகக் கொண்டுள்ள எனக்கு க்ருஷ்ணனே கொடுத்த அருமையான ஒரு வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள முடியாமல் போய்விட்டதே! ஆசை உதிக்கும் போதுதான் க்ருஷ்ணகதை ருசிக்கும். அப்படி ஆசையுடன் வந்த குழந்தைகள் விரட்டியடிக்கப்பட்டார்களே! என் தூக்கத்திற்கு ப்ரதானம் கொடுக்கப்பட்டதே! மாலையில் அவர்களுக்கு விளையாட்டில் புத்திபோகும்போது, வாருங்கள், க்ருஷ்ணகதை சொல்கின்றேன் என்று இழுத்து வைத்து சொல்வது க்ருஷ்ண ப்ரீதியாகுமா?" என்றெல்லாம் பலவிதமாக தன் தாபத்தை வெளிப்படுத்திக் கொண்டு, இனிமேல், தான் ஜாக்ரதையாக இருக்க க்ருஷ்ணன் செய்த அனுக்ரஹம் இது என்றெண்ணி ஒருவாறாக ஸமாதானமடைந்தார்.

பாகவத ஸ்வாமிகள், பாகவத ஸ்லோகங்கள் சொல்லும் பாணி காதுகளுக்கு வெகு ரம்யமாக இருக்கும். சொல்லும்பொழுது, பாஷ்பம், புளகம் முதலிய பாவங்கள் அவர் உடலில் சோபிக்கும். இப்படி மஹத்துவம் வாய்ந்த பாகவதோத்தமருக்கு, அறியா சிறு குழந்தைகளுக்குக்கூட கதைகள் சொல்லி க்ருஷ்ணரதியை வளர்க்கவேண்டும் என்ற துடிப்பு அளவு கடந்தது. மஹத்துக்களின் அளவு கடந்த க்ருபை என்னதென்று புரியவைக்கவே, பாகவத ஸ்வாமிகளின் வாழ்க்கை அமைந்துள்ளது. ■

---

*கலாசாரமும் தெய்வீகமும் நம்முடைய மதத்தில் பின்னிப் பிணைந்துள்ளது. கோலம் போடுவது ஒரு கலாசாரம். அதே ஸமயத்தில் அது தெய்வீக ஸாதனையும் கூட*

**- ஸ்ரீ ஸ்வாமிகள்**

# பாலகர்களுக்கு ஒரு கதை - 22

**- ஸ்ரீ ஸ்வாமிகள்**

## கடவுள் எப்பொழுதும் நன்மையே செய்வார்

ஒரு ஸமயம் கடற்கரையில் அமைந்துள்ள கிராமத்தில் சில வியாபாரிகள் வசித்து வந்தனர். அவர்கள் அனைவரும் கடல் நீரில் உப்பளம் அமைத்து, உப்பு தயாரித்து அதை ஸமீபத்தில் உள்ள நகரத்தில் கூடும் சந்தைக்கு எடுத்துச் சென்று வியாபாரம் செய்து, அதைக் கொண்டு ஜீவனம் நடத்தி வந்தனர். அவர்களுடைய உப்பு தரமாக இருந்ததால் அவர்களுடைய உப்பிற்கு நல்ல வியாபாரம் இருந்தது. அதைக் கொண்டு செல்வச் செழிப்புடன் வாழ்ந்து வந்தனர். ஒவ்வொரு ஸமயமும் வியாபாரம் முடிந்து வருகையில் ஒரு மிகப் பெரிய தொகை அவர்கள் கைவசம் இருக்கும்.

ஒரு ஸமயம் மிகவும் அதிஸயமாக அவர்கள் வியாபாரத்திற்கு எடுத்துச் சென்ற எந்த ஒரு உப்பு மூட்டையும் வியாபாரம் ஆகவில்லை. அவர்கள் அனைவரும் குழுவாக திரும்பி வருகையில், எப்படியும் அடுத்த ஸந்தையில் விற்றுவிடலாம் என்ற நம்பிக்கையுடன் ஸந்தோஷமாக பேசிக் கொண்டே கழுதைமீது வந்து கொண்டிருந்தனர். அந்த ஸமயமாகப் பார்த்து நல்ல மழை வேறு பெய்தது. உப்பு முட்டையெல்லாம் நன்றாக நனைந்து உப்பு முழுவதும் கரைந்துவிட்டது. அதற்காக அவர்கள் பலவாறு இறைவனைக் கடிந்துகொண்டனர். இறைவனுக்கு கருணையே இல்லை, தங்களுக்கு இவ்வளவு பெரிய நஷ்டத்தை உண்டாக்கிவிட்டானே என்று பலவாறு புலம்பினார்கள். ஆனால் அவர்கள் வரும் வழியில் சில திருடர்கள் அவர்களுடைய பணத்தை கொள்ளை அடிப்பதற்காக திட்டமிட்டிருந்தனர். அதற்காக அந்த காலத்தின் வழக்கப்படி கந்தக வெடி மருந்துகளை அவர்கள் வரும் வழியில் புதைத்து வைத்திருந்தனர். மழைமட்டும் பெய்யாமல் இருந்தால் அந்த வெடிமருந்து வெடித்து அத்தனை வியாபாரிகளும், கழுதைகளும் இறந்திருப்பார்கள். அவர்களுடைய பொற்காசுகளும் அப்படியே கீழே சிதறிக் கிடக்கும். அதை எடுத்துக் கொண்டு செல்ல திருடர்கள் திட்டமிட்டிருந்தார்கள். கடவுளின் கருணையினாலேயே மழை பெய்தது. அதனால்தான் அந்த கந்தக வெடி மருந்துகள் செயலிழந்தன. வியாபாரிகளுக்கு நடக்க இருந்தது என்ன என்று தெரியாததாலேயே இறைவனை நொந்துகொண்டார்கள். அது போல் நாமும் எப்பொழுதும் கடவுள் நமக்கு நன்மையே புரிவார் என்று எடுத்துக் கொள்ள வேண்டும். ஆகவே எது நடந்தாலும் அது கடவுள் இஷ்டம் என்று பழகிக் கொள்ள வேண்டும். ■

# நக்ஷத்ரங்களின் பெருமைகளும், விளக்கங்களும் - 25

- நித்யக்னிஹோத்ரி ப்ரஹ்மஸ்ரீ A. ஸுந்தரேஸ ஸர்மா வாஜபேயயாஜி

## அச்வினீ

தேவலோக வைத்யர்கள் எனப்படுகிற அச்வினீ தேவதைகளை அதிதேவதையாகக் கொண்ட உயர்ந்த நக்ஷத்ரம் இது. நல்ல வெண்மையான நிறமுள்ளவர்களும், இரண்டு கைகளுடன் அம்ருதம் நிரம்பிய கலசத்தை கையில் வைத்துக்கொண்டு குதிரை வாகனத்தில் இருக்கக்கூடிய இரட்டையர்கள் அச்வினீ தேவதைகள். மார்கழி மாதம் 27-ஆம் தேதி முதல் தை மாதம் 10-ஆம் தேதி முடிய ஸாயங்காலத்தில் நக்ஷத்ரோதய காலத்தில் 6 நக்ஷத்ரங்களால் குதிரைத் தலை போன்ற ஆதாரத்துடன் வான ஸாஸ்த்ரக்ஞர்களால் அடையாளம் காட்டப்படுகிறது. அச்வினீ தேவதைகளுடைய பெருமை வேதங்களில் மிக உயர்வாக கூறப்பட்டுள்ளது. வெட்டப்பட்ட தலையை கூட உடம்புடன் சேர்த்து உயிர்ப்பிக்கக்கூடிய வைத்யம் செய்பவர்களாக சொல்லப்பட்டுள்ளது.

ஆரோக்கியத்தை வேண்டி செய்யக்கூடிய கார்யங்களை அச்வினீயில் தொடங்கினால் பூர்ணபலன் ஏற்படும். அச்வினீ நக்ஷத்ரத்தில் ஜனிப்பவர்கள் எல்லோரும் விரும்பக்கூடிய ஒரு அழகைப் பெற்றிருப்பார்கள். புத்தி, சக்தி மிகுந்தவர்களாக இருப்பார்கள். தன்னை அலங்கரித்துக் கொள்வதில் விருப்பங்கொண்டிருப்பார்கள். மிகவும் ஸாமர்த்தியசாலியாக இருப்பார்கள். தன்னால் எதையும் ஸாதிக்கமுடியும் என்ற தன்னம்பிக்கை இவர்களுக்கு அதிகம். சூடான ஆஹாரத்தை சாப்பிடுவதில் விருப்பங்கொண்டிருப்பார்கள். கண்கள் சற்று சிவந்திருக்கும். கீரை போன்ற இலை உணவுகளில் ப்ரியம் அதிகம் இருக்கும். வேகமாக சாப்பிடும் தன்மை கொண்டவர்கள். இவர்கள் தான் நினைத்ததை ஸாதிப்பதை மிகவும் விரும்புவார்கள். இவர்களது மனோபிப்ராயத்தை மற்றவர் சீக்கிரத்தில் கண்டுபிடித்து விடமுடியாது. அலைவதில் பிரியம் அதிகம். தன் அதிகாரத்தில் எல்லாம் நடக்கவேண்டும் என்ற மனப்பான்மை கொண்டிருப்பார்கள். வைத்ய ஸம்பந்தமான படிப்பில் இவர்கள் இறங்கினால் மிகவும் ஆச்சரியத்தக்க முறையில் முன்னேறுவார்கள். எப்போதும் தன்னுடன் யாராவது இருந்துகொண்டே இருப்பதை விரும்புவார்கள். இவர்கள் தன்வந்தரி மஹாவிஷ்ணுவை உபாஸிப்பதால் எல்லா மேன்மைகளையும் அடைவார்கள். ■



# ஸ்ரீ ஸ்வாமிகளின் சம்பாஷணைகளிலிருந்து - 49

கௌதமர் போற்றும் ............................ (தொடர்ச்சி)

திருவண்ணாமலையிலேயே வாழ்ந்து பல ஸாதுக்களுக்கு அவர்களின் ஆரோக்யத்திற்காக பலவிதமான கீரைகளை கொடுத்து தொண்டு செய்து வந்த எல்லோராலும் அன்பாக கீரைப்பாட்டி என்று அழைக்கப்பட்ட மூதாட்டிதான் பசு லக்ஷ்மியாக வந்தாள் என்பது எல்லோருடைய அசைக்க முடியாத நம்பிக்கை. அந்த மூதாட்டி, மலைமேல் வாழ்ந்து வருகையில் சில திருடர்கள் வந்து அந்த மூதாட்டிக்கு தொந்தரவு கொடுத்தார்கள். அவள் செய்வதறியாது 'அருணாசலா, அருணாசலா' என்று பக்தியுடன் கூவினாள். அப்படி அவள் கூவியது யார் காதிலும் விழுந்திருக்க நியாயமில்லை. அப்படிப்பட்ட நிலையிலும், அவள் முன் தோன்றியது நம் பகவான்தான். 'அருணாசலா' என்று கூவ, பகவான் அவள் முன் 'வந்துவிட்டேன்' என்று தோன்றி அவளை ஆச்சரியப்படுத்தினார். இந்த பெருமை வாய்ந்த மலை சிவ ஸான்னித்யம் நிரம்பியதாக உள்ளது. சேஷாத்திரி ஸ்வாமிகள் இந்த மலையை ஒரு லக்ஷத்து எட்டு முறை ப்ரதக்ஷிணம் செய்ததாக ஒரு ஆதாரமற்ற செய்தி கூறுகின்றது. மனித யத்தனத்தில் இது ஸாதிக்க முடியாத ஒரு காரியமாக இருந்தாலும் சேஷாத்திரி ஸ்வாமிகள் போன்ற யோகீஸ்வரர்களுக்கு இது ஸாத்தியமாவதில் வியப்பு ஒன்றும் இல்லையே.

முதலியார் என்று ரமணபக்தர்களால் அன்புடன் அழைக்கப்பட்ட பகவானுடைய ஒரு உத்தமபக்தர், பகவானிடம் அவ்வப்பொழுது ஸம்பாஷணை செய்த விஷயங்களை எல்லாம், அனைவருக்கும் பயன்படும் பொருட்டு, பல புத்தகங்களில் தெரிவித்து உள்ளார். ஒரு ஸமயம், பகவானிடம் அவர், நான் கிரிப்ரதக்ஷிணம் செய்ய வேண்டுமா? செய்ய வேண்டுமாயின் அதன் பலன் என்ன? என்று வினவினார். அதற்கு பதிலுரைத்த பகவான் ரமணரோ, செய்து பாருங்கள், உங்களுக்கே அதன் பலன் தெரியும் என்றார். புல்வெளியில் மாட்டை மேய விடுபவர்கள் ஒரு கவ்வையை அடித்து மாட்டை அதில் கட்டி விடுவார்கள். அந்த மாடு சுற்றி சுற்றி வரும்பொழுது, அந்த கயிறானது கவ்வையை சுற்றி சுற்றி, கடைசியாக மாடானது கவ்வை இருக்குமிடத்திற்கே வந்து, எங்கும் நகர முடியாதபடி நின்று விடும். அதுபோல், இந்த மலையை ப்ரதக்ஷிணம்

செய்து வருபவர்களின் மனதானது சிறிது சிறிதாக அடங்கி மனதின் உற்பத்தி ஸ்தானமான ஆத்மாவிலேயே ஒடுங்கி விடும்.

பஹிர்முக ஸாதனைகளை அநேக மஹாத்மாக்கள் வலியுறுத்தி உள்ளார்கள். அவர்களும் அநேகமாக ஸகுண உபாஸனை செய்தவர்களாக இருப்பார்கள். மேலும், அவர்களும் தீர்த்தயாத்திரை க்ஷேத்ராடனம், பூஜை என்று பலவிதமான பஹிர்முகமான ஸாதனைகளில் ஈடுபட்டவர்களாக இருப்பார்கள். அத்தகைய மஹாத்மாக்கள் நம்மை கிரிப்ரதக்ஷிணம் செய்யச் சொன்னால், அதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. ஆனால் பகவான் ரமணரோ எந்தவிதமான பஹிர்முக ஸாதனைகளிலும் ஈடுபட்டதில்லை. எல்லோருக்கும் நேர்மார்க்கமாக தான் அனுபவத்தில் கண்ட, ''நான் யார்'' என்ற ஆத்மவிசார மார்க்கத்தையே உபதேசித்தார் அத்தகைய பகவான் ரமணர் பலருக்கு இந்த கிரிப்ரதக்ஷிணத்தின் மஹிமையை எடுத்துக்கூறி, கிரிப்ரதக்ஷிணம் செய்யும்படி வலியுறுத்தியது மட்டுமல்லாமல், தானும் தேஹ ஆரோக்கியத்துடன் இருக்கும்வரை விடாமல் கிரிப்ரதக்ஷிணம் செய்து வந்தார். அதுவே இந்த மலைக்கு பெரிய ஏற்றம். இதைக்காட்டிலும், இந்த மலையின் மஹத்துவத்தை சொல்லுவதற்கு பெரிய பிரமாணம் தேவை இல்லை. அருணாசல மஹாத்மியத்தில் இன்னன்ன கிழமைகளில், இன்னன்ன நக்ஷத்திரங்களுடன் கூடின கிழமைகளில், பிரதக்ஷிணம் செய்து வருபவர்களுக்கு இன்னின்ன பலன் என்று விபரமாக குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்த மலையின் பெருமையை கூறும் வல்லாள மஹாராஜாவின் சரித்திரம் மிகவும் பிரசித்தமானது.

ஒரு சமயம் சேஷாத்திரி ஸ்வாமிகள் இந்த மலையின் அடிவாரத்தில் ஸஞ்சாரம் செய்து கொண்டிருந்தார். அப்பொழுது மாலைப்பொழுதாகி விட்டது. அன்று ஒரு பையன் ஏதோ கவலையுடன் அந்தப்பக்கமாக சென்று கொண்டிருந்தான். பரமகருணையுடன் அவனை அழைத்த ஸ்வாமிகள், என்ன கவலை, யாரையாவது தேடுகிறாயா எனக் கேட்டார். அதற்கு அந்தப் பையன், என்னுடைய தாயார் தினமும் கிரிப்ரதக்ஷிணம் செய்யும் பழக்கம் உடையவர்கள். இன்று காலை வழக்கம் போல் கிரிப்ரதக்ஷிணம் செய்வதற்காக கிளம்பி சென்றார். இதுவரையிலும் வீடு திரும்பவில்லை. ஆகவேதான், என்னுடைய தாயாரை தேடிக்கொண்டு இருக்கிறேன் என்று கவலையுடன் பதிலுரைத்தான். அதை செவியுற்ற ஸ்வாமிகள், உன்னுடைய தாயார் திரும்பி வரமாட்டாள் என்றும், இந்த மலையுடன் ஐக்கியமாகி விட்டாள் என்றும் பலவாறாக கூறி, அவனை ஸமாதானப்படுத்தி அனுப்பினார். அத்தகைய திவ்யகாந்த சக்தி உள்ள மலை இது.

(தொடரும்)

# செய்திகள்

## ஆகஸ்ட் - 7-ந் தேதி, 8-ந் தேதி

ஸ்ரீஸ்வாமிகள், பெங்களூர் மல்லேஶ்வரம் ஸ்ரீ காஞ்சி காமகோடி ஶங்கர மடத்தில் ஸ்ரீபாண்டுரங்க பஜனை மண்டலி அவர்கள் ஸார்பில் ஸ்ரீவாஞ்சியம் ஸ்ரீ முரளீதரபாகவதர் அவர்களின் அஷ்டபதி பஜனை, திவ்யநாமம், ராதா கல்யாண மஹோத்ஸவத்தில் கலந்து கொண்டார்கள்.

## ஆகஸ்ட் 11-ந் தேதி - சூரியக்ரஹணம்

ஸ்ரீஸ்வாமிகள், மாதுரிஸகி ஸமேத ப்ரேமிகவரதனுடன் திருமலை யாத்ரை சென்றார்கள். திரளான பக்தர்கள் திருமலைக்குச் சென்றார்கள். பக்தர்கள் ஸ்ரீஸ்வாமிகள், மாதுரிஸகி ஸமேத ப்ரேமிகவரதன், ஸ்ரீ வேங்கடேசபெருமாள் தரிசனம் செய்தார்கள்.

## ஆகஸ்ட் 12-ந் தேதி

ஸ்ரீஸ்வாமிகள், பக்தர்களுடன் மாலையில் திருமலையில் உள்ள ''ஹாதிராம்'' பாபாவின் ஜீவ ஸமாதிக்குச் சென்றார்கள். பிறகு பாபவிநாசம் தீர்த்தத்திற்குச் சென்றார்கள். பிறகு ஆகாச கங்கைக்குச் சென்றார்கள். பிறகு பக்தர்களுடன் பெருமாள் மாட வீதி வலம் வந்தார்கள். மாலையில் ஸ்ரீஸ்வாமிகள் ப்ரவசனமும், இரவு திவ்யநாம பஜனையும் செய்தார்கள்.

## ஆகஸ்ட் 18-ந்தேதி

ஆடிப்பூரத்தை முன்னிட்டு சென்னை ப்ரேமிக பவனத்தில் ஆண்டாள் கல்யாணம் நடைபெற்றது. அஷ்டபதிகள் பாடப்பட்டன.

## ஆகஸ்ட் 14, 15 தேதிகள்

ஆதம்பாக்கம் ஸீதாராமன் அவர்கள் க்ருஹத்தில் நடைபெற்ற அஷ்டபதி பஜனை, திவ்யநாமம் மற்றும் ராதாகல்யாண மஹோத்ஸவத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் கலந்து கொண்டார்கள்.

## ஆகஸ்ட் 21, 22 தேதிகள்

ஸ்ரீ ஸ்வாமிகள், மாதுரி ஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிக வரதனுடன் சேலம் ஸ்ரீ குமார் அவர்கள் க்ருஹத்திற்கு விஜயம் செய்து அஷ்டபதிபஜனை, திவ்யநாமம், ராதா கல்யாண மஹோத்ஸவம் முதலியவற்றில் கலந்து கொண்டார்கள்.

ஸ்ரீ ஹரி:

*ஓம் நமோ பகவதே வாஸுதேவாய ।*

*ஸ்ரீ ராதாக்ருஷ்ண பரப்ரஹ்மணே நம:*

குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்

சென்னை - 600 083

# மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிக வரதனின் ஆறாவது வருட ப்ரஹ்மோத்ஸவம்

---

இடம் : மதுரபுரி

தேதி : 2-9-1999 முதல் 12-9-1999 வரை

---

**நிகழும் ப்ரமாதி வருஷம், ஆவணி மாதம், 16-ம் தேதி (2-9-1999) வியாழக்கிழமை, கோகுலாஷ்டமி ஶுப தினத்தில் ஆரம்பித்து, மாதுரி ஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனின் ஜனனோத்ஸவம் மதுரபுரியில் நடக்கின்றபடியால், பாகவதோத்தமர்கள் அனைவரும் இதில் கலந்துகொண்டு ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவின் க்ருபைக்கு பாத்திரர்களாகும்படி கேட்டுக் கொள்கின்றோம்.**

**— நிர்வாகிகள்**

ஸ்ரீ ஹரி:

# மாதுரி ஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிக வரதனின் ஆறாவது வருட ப்ரஹ்மோத்ஸவம்

## நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| 2-9-1999 | இரவு | நந்தோத்ஸவம் |
| 3-9-1999 | | ஶேஷவாஹனம் |
| 4-9-1999 | | ஸிம்மவாஹனம் |
| 5-9-1999 | | புன்னைமரவாஹனம் |
| 6-9-1999 | | ஏகாதஶீ – கருடவாஹனம் |
| 7-9-1999 | காலை | கோவிந்த பட்டாபிஷேகம் |
| | இரவு | யானை வாஹனம் |
| 8-9-1999 | இரவு | நிகுஞ்ஜோத்ஸம் |
| | | நெய்வேலி |
| | | ஸ்ரீ ஸந்தானகோபாலன் கச்சேரி |
| 9-9-1999 | இரவு | குதிரை வாஹனம் |
| 10-9-1999 | | ஜானவாஸம் |
| | | கடலூர் |
| | | பாலசந்தர் - பாலமுருகன் (நாதஸ்வரம்) |
| 11-9-1999 | காலை | ராதை திருக்கல்யாணம் |
| | இரவு | தெப்பம் |
| 12-9-1999 | காலை | விடையாற்றி |

தினமும் ப்ரவசனமும் கீர்த்தனமும் நடைபெறும்


# மதுரமுரளி

Registered as Newspaper in India

Registar of Newspapers for India
R. No. 62828/95

Regd. No. TN/Chief PMG - 3/99

வேணு : 5 | செப்டம்பர் 1999 | கானம் : 2



Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai 600 083 and Printed by Mrs. Sri Kalaivani of Sri Maruthy Laser Printers, 174, Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar